[17th July 1962

திரு. வ. ஜீவரத்தினம் : சுமத்தப்பட்டிருக்கிற குற்றச்சாட்டுகள் அரசியல் காரணத்திற்காக சுமத்தப்பட்டிருக்கின்றன என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சொந்த மனஸ்தாபத்தின் அடிப்படையில் சாட்டப்பட்டிருக்கின்றன என்று சொன்னேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : பழனி உறுப்பினர் அவர்கள் அதைப்பற்றி பொது விவாதத்தின்போது எடுத்துச் சொன்ன நேரத்தில் சொந்த மனஸ்தாபத்தின்பேரில் அப்படிச் சொல்லக் கூடாது என்ருர்கள். காங்கிரஸ் அபேட்சகரைத் தோற்கடித்துவிட்டு அவர் வந்து சொல்வதனுல் அப்படிச் சொல்வது நியாயமா என்று கேட்கிறேன் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதுமாத்திரம் இல்லை. எனக்குத் தெரிந்ததை நான் சொன்னேன்.

* 358 கேள்வி.—**திரு. கே. சீமைச்சாமி :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தேவஸ்தான நிலங்கள் எப்படி குத்தகைக்கு விடப்படுகின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The lands belonging to religious institutions are leased out in accordance with the rules framed under the Hindu Religious and Charitable Endowments Act.

* 359 கேள்வி.—**திரு. கே. சீமைச்சாமி :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பழனி தண்டாயுதபாணி தேவஸ்தான கும்பாபிஷேகத்திற்கு ஆன மொத்தச் செலவு என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Rs. 1,87,389·57.

* 360 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், செய்யாறு வட்டம், திருவத்திபுரம் ஸ்ரீ பாலகுஜாம்பாள் சமேத வேதபுரீஸ்வரர் திருக்கோயில் திருப்பணிக்கு (செப்பன்செய்து சீர்படுத்த) அரசு அளித்த தொகை எவ்வளவு ? எப்போது அளிக்கப்பட்டது ?

(இ) அத் திருப்பணிப் பொறுப்பு யாரிடம் ஒப்படைக்கப்பட்டது ?

(உ) அத் திருப்பணி இப்போது எந்த அளவு முடிந்துள்ளது ?

(எ) திருப்பணி செயல்படுவதைக் கண்காணிக்க அரசு நடவடிக்கை ஏதேனும் மேற்கொண்டதுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ( ) Rs. 15,000 on 5th March 1956.

(இ) Renovation Committee, Tiruvottipuram.

(உ) A part of the work amounting to Rs. 16,769-11-6 has been completed so far.

( ) The work is being supervised by the Assistant Commissioner, Kancheepuram.

புலவர் கா. கோவிந்தன் : இது போன்ற கேள்வி சட்டசபைக்கு வந்ததை அறிந்தபின்தான் வேலை இப்போது தொடங்கியிருக்கிறது. ஆகவே இனியாகிலும் அரசாங்கம் கண்காணிப்பாக வேலை தடைபடாமலும், ஒழுங்காகச் செலவுகள் ஆகும்படியும் கவனித்துக்கொள்வதற்கு முயற்சி எடுத்துக்கொள்வார்களா ?